# FORUM OF BSNL UNIONS/ASSOCIATIONS OF EXECUTIVES AND NON EXECUTIVES

தமிழ் மாநிலம்

## அகில இந்திய FORUMன் முடிவை தமிழகத்தில் வெற்றிகரமாக்குவோம்!!!

## இரவு 9 மணி முதல் காலை 7 மணி வரையான இலவச அழைப்பு வசதியை மக்களிடம் கொண்டு சேர்த்து தரைவழி இணைப்புகளை அதிகரிக்க ஒரு மாத தொடர் இயக்கம்

அன்பார்ந்த தோழர்களே,

இரவு 9மணி முதல் காலை 7மணிவரை தரைவழித் தொலைபேசியில் இலவசமாகப் பேசலாம் எனும் நிர்வாகத்தின்திட்டம் போதுமான அளவிற்கு விளம்பரப் படுத்தி பொதுமக்களிடையே கொண்டுசெல்லப் படாதது குறித்துக் கவலை தெரிவித்தநமது அகில இந்தியFORUM“ஜூன்-8முதல், ஜூலை-7, 2015 வரை, “ஒருமாத தொடர்இயக்கம்“ நடத்தி “இலவச அழைப்புகள் வசதி“ திட்டத்தை மக்களிடம் செம்மையாக விளக்கி, அதன் தொடர்ச்சியாக தரைவழித் தொலைபேசியை அதிகரிப்பதற்கான முயற்சியை எடுக்கவேண்டும் என்று ஒருமனதாக முடிவெடுத்துள்ளது. அதிக எண்ணிக்கையில் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளை இந்த இயக்கத்தில் ஈடுபடச் செய்து, ஒரு வலுவான இயக்கமாக இதனை நடத்திட வேண்டும். ஃபளக்ஸ் போர்டு வைப்பது, சுவரொட்டி விளம்பரங்கள் மூலம் மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும். துண்டறிக்கைகளை வீடுவீடாகச் சென்று கொடுக்க வேண்டும். உள்ளூர் தொலைக்காட்சிகள் மற்றும் சமூக வலைத்தளங்கள் வழியாகவும் விளம்பரப்படுத்திட வேண்டும்.இயன்ற இடங்களில் “மேளா“க்களை நடத்த வேண்டும். புதிதாகத் தோன்றிய அபார்ட்மெண்டுகள், தெருக்கள், குடியிருப்புகளில் புதிய இணைப்புக்கள் கொடுப்பதற்கான முயற்சிகளைக் கட்டாயமாகச் செய்திட வேண்டும்.அண்மையில் தமது இணைப்புக்களை துண்டித்துக்கொண்ட சந்தாதாரர்களை அணுகி, மறுஇணைப்பு / புதிய இணைப்புகள் கொடுப்பதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும்.பழுதற்ற சேவையைக் கொடுப்பதிலும் பழுதுவந்தால் உடனே சரிசெய்து கொடுப்பதிலும் காட்டும் நமது திறமைதான் “இலவச அழைப்புவசதி“ திட்டத்தின் வெற்றிக்கு அவசியமானது என்பது சொல்லி தெரியவேண்டிய அவசியமில்லை. எனவே, இதில் தேவையான கவனத்தைச் செலுத்திடவேண்டும்.இதனை செயல்படுத்துவதில் ஏதாவது பொருட்கள், கருவிகள் மற்றும் நிதிப் பற்றாக்குறைகள் தடையாக இருந்தது என்றால் அதனை உடனடியாக மாவட்ட நிர்வாகங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இது குறித்த மேல்மட்டதலையீடு தேவையெனில் அந்த விவரங்களை உடனடியாக மாநில FORUM-த்தின்கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

மேலும், தற்போது ஜூன் 15 முதல்BSNL மொபைல்களுக்கு இலவச ரோமிங் வசதியும் அறிமுகப்படுத்த உள்ளதாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதனையும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யவேண்டும். தனியார் நிறுவனங்கள் கட்டணங்களை அதிகப்படுத்து துடித்து வருகின்ற இந்த சமயத்தில் நமது BSNL நிறுவனம் இந்த இலவசங்களை அறிவித்துள்ளது, நமது நிறுவனத்தின் மீது மக்களுக்கு பெருமதிப்பு உருவாகும். அந்த செய்திகளை மக்களுக்கு கொண்டு செல்வதினாலும், நமது சேவைகளை சிறப்பாக செய்வதினாலும் நமது கண்ணின்மணியான BSNL நிறுவனத்தை காத்திட முடியும் என்ற நம்பிக்கையோடு களத்தில் இறங்குவோம்.

அகில இந்திய FORUMன் முடிவுகளை தமிழகத்தில் அமலாக்கும் விதமாக வருகிற ஜூன் மாதம் 8ஆம் தேதி தமிழக FORUM கூட்டம் சென்னையில் நடைபெற உள்ளது. அதே தேதியில் அனைத்து மாவட்ட FORUMகளும் கூடி இந்த இயக்கத்தை தங்கள் மாவட்டத்தில் நடத்துவது தொடர்பாக திட்டமிட்டு ஜூன் 11 ஆம் தேதி அனைத்து மாவட்ட FORUMதலைவர்களும் மாவட்ட நிர்வாகத்தை சந்தித்து நாம் எடுக்கும் முடிவுகளை விளக்கி அதற்கு அவர்களின் ஒத்துழைப்பை கோர வேண்டும். ஜூன் 15முதல் இந்த ஒரு மாத கால இயக்கத்தை செயல்படுத்த வேண்டும்.நமதுபணிகளைஜூன் 25 துவங்கி பத்து நாட்களுக்கு ஒருமுறை பரிசீலனை செய்து முன்னேறுவோம்.

BSNLன் புத்தாக்கத்திற்கு நாம் நமக்கு கிடைத்துள்ள இந்த வாய்ப்பை சிறப்பாக பயன்படுத்தி நாம் நமது BSNL ஐ காத்திடுவோம்.

தோழமை வாழ்த்துக்களுடன்,

| | | |
|---|---|---|
| R.பட்டாபிராமன்<br>Forum தலைவர் & CS NFTE | S. செல்லப்பா<br>Forum கன்வீனர் | A.பாபு ராதாகிருஷ்ணன்<br>மாநிலச் செயலர், BSNLEU |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | -Sd- |
| M.கோபிநாதன்<br>CS,SNEA(I) | S.சிவக்குமார்<br>CS,AIBSNLEA | K.ராஜசேகரன்<br>CS, AIBSNLOA | P.அழகுபாண்டியராஜா<br>CS, SNATTA | A.சிவராமன்<br>CS, SEWA BSNL |

| | | | |
|---|---|---|---|
| | -Sd- | -Sd- | -Sd- |
| T.செந்தில் குமார்<br>CS, TSOA | G.சரவணக்குமார்<br>CS, AIGETOA | C.வினோத்குமார்<br>CS, TNTCWU | R.செல்வம்<br>CS, TMTCLU |